தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – சித்திரை 14

2010 ஏப்ரல் 27, செவ்வாய்க்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை—தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9—30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்."

அனைத்து மக்களும் சமம் எனினும் அவரவர்க்குரிய ஆற்றலுக்கேற்ப அவர்களைப் பயன்படுத்திக் கொண்டால், அந்த அரசை அனைவரும் அரணாகச் சூழ்ந்து நிற்பர்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா—விடை நேரம். *(குறுக்கீடுகள்)*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று கேள்வி நேரத்தை ஒத்திவைக்க வேண்டுமென கோஷமிட்டனர்.)

வினா—விடை நேரத்தில் யாரும் இடையூறு பண்ணக்கூடாது. *(குறுக்கீடுகள்)* எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். வினா—விடை நேரம்.

வினா வரிசை எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)*

101—

மண் பரிசோதனை நிலையம்

*118927—**திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் பேரூராட்சியில் மண் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அ.தி.மு.க. உறுப்பினர்களை அன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம், இது வினா—விடை நேரம். இது கட்டாயமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நேரம். இந்த நேரத்தில் யாரும் இடையூறு பண்ணக்கூடாது. இடையூறு பண்ணாமல் அமைதியாக எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வேறு யாருக்கும் பேசுவதற்கு அனுமதி கிடையாது. (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். அமைதியாக உட்காருங்கள் எல்லோரும். கேள்வி நேரத்தில் யாரும் இடையூறு பண்ணாதீர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பிரச்சினைகளை எழுப்பலாம், ஆனால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் மற்றவைபேச mike, permission மற்றவர்களுக்குக் கிடையாது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: கேள்வி நேரத்தில் எழுப்ப வாய்ப்பில்லை. எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் விதியை மீறி . . . (குறுக்கீடுகள்)

2010 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சி உறுப்பினர் யாருக்கும் mike தர முடியாது. கேள்வி நேரத்தில் அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். எல்லோரும் அமைதியாக இருங்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: கேள்வி நேரம் முடிந்தவுடனே, நீங்கள் Zero hour-ல் பிரச்சினையை எழுப்பலாம். அதுதான் விதியில் இருக்கிறது.

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டு கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைதியாக உட்காருங்கள். நான் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். அமைதியாக உட்காருங்கள். சபை நடவடிக்கைக்கு இடையூறு பண்ணாதீர்கள். (குறுக்கீடுகள்) சபையை நடத்துவதற்கு இடையூறு பண்ணாமல் எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) mike தர முடியாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக்கொண்டு ஒரு நடமாடும் மண் ஆய்வுக் கூடம் 2004 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருவதுடன் (குறுக்கீடுகள்) 2009 ஜூன் மாதம் முதல் ஒரு புதிய மண் ஆய்வுக் கூடம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் 30 மண் ஆய்வுக் கூடங்களும், 16 நடமாடும் மண் ஆய்வுக் கூடங்களும் செயல்பட்டு வருகின்றன. மண் ஆய்வுக் கூடம் மற்றும் நடமாடும் மண் ஆய்வுக் கூடம் இவை இரண்டும் செயல்பட்டு வரும் 16 மாவட்டங்களில் திருவண்ணாமலை மாவட்டமும் ஒன்றாகும். (குறுக்கீடுகள்) இந்த மாவட்டத்தில் உள்ள 2 மண் ஆய்வுக் கூடங்களும் போளூர் பேரூராட்சி விவசாயிகளுக்கு மட்டுமின்றி, திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் அனைவரும் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருவதால், போளூர் பேரூராட்சிப் பகுதியில் தனியாக மண் பரிசோதனை நிலையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

[2010 ஏப்ரல் 27

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) 'நீங்கள் நல்லா இருக்கோணும் நாடு முன்னேற, நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற' என்ற வைர வரிகளுக்குத் தகுந்தாற்போல் இன்றைக்கு தமிழகத்திலே தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) நூறு சதவிகிதம் விவசாயிகள் வாழுகின்ற போளூர் தொகுதிக்கு விளைச்சல் பெருகுவதற்காகவும், விவசாயிகள் இலாபம் பெறுவதற்காகவும் மண் பரிசோதனை நிலையம் அவசியம். மண் பரிசோதிக்கப்பட்டால் என்ன பயிர் வைக்கலாம், என்று ஆய்ந்து என்ன உரம் போடலாம், எப்படி உற்பத்தியைப் பெருக்கலாம் என்று ஆய்ந்து, இலாபத்தை உயர்த்துவதில் விவசாயிகளுக்குச் சாதகமாக இருக்கும். (குறுக்கீடுகள்) விவசாயக் கல்லூரி கேட்டேன் (குறுக்கீடுகள்) . . .

முற்பகல் 9–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்வது, நானாக வெளியேற்றினேன் என்றால், இன்றைக்கு முழுவதும் நீங்கள் அவைக்கு வரமுடியாது. நீங்கள் வெளியேற வேண்டுமென்று நினைத்தீர்கள் என்றால், அது உங்கள் இஷ்டம். பேசுவதற்கு எல்லாம் கேள்வி நேரத்தில் அனுமதி கிடையாது. (குறுக்கீடுகள்)

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் கல்லூரி கேட்டேன்; போளூர் பேரூராட்சியை, நகராட்சியாகத் தரம் உயர்த்தக் கேட்டேன். செண்பகத்தோப்பு அணைக்கட்டைத் திறக்கக் கேட்டேன். களம்பூரிலே 30 படுக்கை வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் கேட்டேன்; களம்பூர், கேளூர் போன்ற பகுதிகளுக்குத் துணை மின் நிலையம் கேட்டேன்; அமிர்தி வன விலங்குப் பூங்காவைத் தரமுயர்த்தித் தரக் கேட்டேன். எதுவும் கிடைக்கவில்லை. என்னுடைய தொகுதியிலே இந்த மண் பரிசோதனை நிலையமாவது கொடுப்பீர்களா என்று கேட்கின்றேன். (குறுக்கீடுகள்) எங்கள் பகுதி விவசாயிகள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

2010 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 19 மண் ஆய்வுக் கூடங்கள் மற்றும் 16 நடமாடும் மண் ஆய்வுக் கூடங்கள் வேளாண்மைத் துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றன. 2009–2010 ஆம் ஆண்டு புதியதாக 11 மண் ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டதன் மூலமாக தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் மண் பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 2009–2010 ஆம் ஆண்டு 10.07 இலட்சம் மண் மாதிரிகள், 30 மண் ஆய்வுக் கூடங்கள் மற்றும் 16 நடமாடும் மண் ஆய்வுக் கூடங்கள்மூலம் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. விளை நிலங்களிலிருந்து சேகரித்துப் பெறப்படும் மண் மாதிரிகளில் பேரூட்டச் சத்துக்களுக்கான தழைச் சத்து, மணிச் சத்து, சாம்பல் சத்துகளின் நிலை மற்றும் மண்ணின் நிறம், அமில நிலை, உவர் தன்மை ஆகியவையும் கண்டறியப்பட்டு, உரிய உரப் பரிந்துரைகளும், நிலச் சீர்திருத்த வழிமுறைகளும் விவசாயிகளுக்குத் தெரியப்படுத்தப்படுகின்றன. இத்துடன் நுண்ணூட்டச் சத்துக்களின் ஆய்வும் ஆய்வுக் கூடங்களில் மேற்கொள்ளப்பட்டு நுண்ணூட்டப் பரிந்துரைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. சாதாரணமாகப் பணியாளர்கள் உட்பட பேரூட்டச் சத்து மற்றும் நுண்ணூட்டச் சத்து ஆய்வு செய்ய ஒரு மண் மாதிரிக்கு சுமார் ரூ.105 செலவாகிறது. விவசாயிகள் நலன் கருதி . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன், மக்களுடைய முக்கியமான பிரச்சினையை இன்றைக்கு அவையிலே விவாதிக்க வேண்டியிருக்கிறது. நீங்கள் தேவையில்லாமல் இடையூறு பண்ணாதீர்கள். அமைதியாகப் போய் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: ஒரு மண் மாதிரி ஆய்வுக்கு ரூ.10/–ம், அதாவது பேரூட்டச் சத்துக்கு ரூ.5/–ம், நுண்ணூட்டச் சத்துக்கு ரூ.5/–ம், பாசன நீராய்வுக்கு ரூ.10/–ம், மொத்தம் 20 ரூபாய் மட்டும் விவசாயிகளிடம் ஆய்வுக் கட்டணமாகப் பெறப்படுகிறது. ஆய்வின் அடிப்படையில் சாகுபடி செய்யும் பயிர்களுக்கு ஏற்ப உரப் பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

[2010 ஏப்ரல் 27

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதி விவசாயிகள் நிறைந்த பகுதி. எங்கள் பகுதி விவசாயிகள் எல்லாம் இப்பொழுது கடலூர், இராணிப்பேட்டை போன்ற இடங்களுக்கு மண் பரிசோதனைக்காகச் செல்லுகிறார்கள். பல ஆண்டுகளுக்கு ஒரு முறை நடமாடும் மண் பரிசோதனை நிலையம் வருகிறது. எங்கள் பகுதியில் உள்ள விதைப் பண்ணை விவசாய அதிகாரி Agriculture Officer பினாமியாக ஆலை வைத்துக்கொண்டு, விதைகளைத் தயார் செய்து விவசாயக் கூடத்திலே விற்பனை செய்கின்றார். (குறுக்கிடுகள்) என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்? ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்? இயற்கை உரத்தை நாம் பயன்படுத்த வேண்டும். அப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று சொன்னால்-பாரதப் பிரதமர் அவர்கள் கூட்டிய கூட்டத்திலே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் பருப்பு வகைகளைத் தனி பயிராகவே பயிரிட வேண்டுமென்று சொன்னார்கள். அப்பொழுதுதான் விலைவாசி குறையும் என்று சொன்னார்கள். அந்த யோசனையைச் செயல்படுத்த வேண்டுமென்று சொன்னால்-எங்கள் பகுதியிலே இருக்கக்கூடிய சுண்ணாம்பு சத்து கலந்த மண், மணல் கலந்த மண், களிமண் கலந்த மண், செம்மண், இப்படிப்பட்ட மண்கள் எல்லாம் இருக்கின்றன. அந்த மண்வளத்திலே எந்தெந்த இயற்கை உரத்தை சேர்ப்பது, மணிலாவை நன்றாக எப்படி வளர்க்க முடியும், நெல்பயிரை எப்படி நன்றாக வளர்க்க முடியும் என்று யோசித்து வாழைப் பயிரை எப்படி நன்றாக வளர்க்க முடியும், மஞ்சள் பயிரை எப்படி நன்றாக வளர்க்க முடியும் என்று ஆய்வு தேவை. ஊடுபயிரென்று துவரை, உளுந்து போன்றவற்றையெல்லாம் பயிரிட்டுக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு அவையெல்லாம் இல்லாமல் போனதற்குக் காரணமே, மண் வளத்தைப் பற்றிய அறிவு விவசாயிகளுக்குக் குறைந்து இருக்கிற காரணத்தால்தான். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எங்கள் பகுதியிலே ஒரு மண்வள பரிசோதனை நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த். (குறுக்கீடுகள்)

முற்பகல் 9—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

2010 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள 80 இலட்சம் பண்ணைக் குடும்பங்களுக்கு மண்வள அட்டை வழங்கத் திட்டமிடப்பட்டு, இதுவரை 21.74 இலட்சம் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். கேள்வி நேரம் முடிந்த பிறகு உங்கள் கோரிக்கை என்ன உண்டோ சொல்லுங்கள், கேட்கிறேன். (குறுக்கீடுகள்) கேள்வி நேரம் முடிந்த பிறகு நீங்கள் சொல்லக்கூடிய கோரிக்கையை ஏற்கத் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடுகள்) நீங்கள் சபையினுடைய நடவடிக்கைக்கு இடையூறு பண்ணாமல் முதலில் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் கேள்வி நேரம் முடிந்தவுடன் எந்த ஒரு உறுப்பினரும், எந்தவொரு கட்சித் தலைவரும் தாங்கள் கருதுகிற பிரச்சினையை எழுப்புவதற்கோ அல்லது அரசாங்கத்தைக் கண்டித்து சில வார்த்தைகள் சொல்வதற்கோ சந்தர்ப்பம் உண்டு. ஆனால், கேள்வி நேரம் என்பது அவையினுடைய மொத்த உரிமை. அந்த உரிமையிலே தலையிட்டு, அவையைத் தடுப்போம் என்று சொல்வது சரியல்ல. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரோ அல்லது எதிர்க்கட்சி கொறடாவோ, கேள்வி நேரம் முடிந்தவுடனே பத்து நிமிடங்கள் வேண்டுமானால் எதிர்ப்பைத் தெரிவிக்கலாம். இப்போது எதிர்ப்பது அவையின் நடவடிக்கைகளைத் தடுப்பதாகப் பொருள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வி நேரம் முடிந்த பிறகு நீங்கள் என்ன சொல்லவேண்டுமோ, அதைச் சொல்லுங்கள். நான் நேரம் ஒதுக்கித் தருகிறேன். கேள்வி நேரத்தின்போது எந்த வகையிலும் இடையூறு செய்வதை நான் அனுமதிக்க முடியாது. எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா, தலைவர் அவர்கள் முன்மொழிந்த கோரிக்கையை, கேள்வி நேரத்தை*

ஒத்திவைக்கலாமா என்பதையே வேண்டாம் என்று சொன்னவர். தலைவரும், அதற்கு சரி வேண்டாம், ஒத்திவைக்க வேண்டாம் என்று சொன்னார். இப்போது நீங்கள் மட்டும் கலாட்டா செய்வது நியாயமா என்பதை மனசாட்சியோடு நினைத்துப் பாருங்கள். எப்பொழுதுமே zero hour-ல்தான் பிரச்சினையை எழுப்பலாமே தவிர, கேள்வி நேரத்திலே பிரச்சினையை எழுப்புவதற்கு வாய்ப்பு இல்லை. எப்பொழுதுமே கிடையாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய துணை வினாவிற்கு, தமிழ்நாட்டிலுள்ள. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அவைக்குக் குந்தகமாக கோஷமிட்டுக் கொண்டிருக்கிற உறுப்பினர்களை தயவுசெய்து வெளியேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 9—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் திரும்பத் திரும்ப எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். கேள்வி நேரம் முடிந்த பின்னர் உங்களுக்கு உரையாற்ற நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அதைவிட்டுவிட்டு, கேள்வி நேரத்தின்போது, மற்ற உறுப்பினர்கள் பேசும்போது இடைமறிப்பதோ அல்லது அமைச்சர் பேசுவதைத் தடுப்பதோ, நீங்கள் இந்த மாதிரி செய்வதை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) திரும்பவும் எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) போய் உட்காருங்கள். இல்லையென்றால் வெளியேற்றுகிற நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடுகள்) நான் வெளியேற்றுகிற நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடுகள்) இவ்வளவு நேரம் நான் உங்களுக்கு எச்சரிக்கை கொடுத்தும், நீங்கள் அதைக் கேட்கத் தயாராக இல்லை. (குறுக்கீடுகள்) நான்தான் வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்கிறேனே! (குறுக்கீடுகள்) கேள்வி நேரம் முடிந்த பிறகு வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்கிறேனே! (குறுக்கீடுகள்) இல்லை, கேள்வி நேரத்தின்போது வாய்ப்புத் தர

2010 ஏப்ரல் 27]

முடியாது. (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள் அவ்வளவு உறுப்பினர்களையும் வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை உறுப்பினர் திரு. விஜயகுமார் அவர்கள் துணைக் கேள்வியாகக் கேட்டதற்கு ஏற்கெனவே நான் பதில் அளித்திருக்கின்றேன். இருப்பினும், தமிழ்நாட்டிலுள்ள 80 இலட்சம் பண்ணைக் குடும்பங்களுக்கு மண்வள அட்டை வழங்கத் திட்டமிடப்பட்டு, இதுவரை 21.74 இலட்சம் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தமிழகத்திலுள்ள 385 வட்டாரங்களிலும், சிறிய மண் பரிசோதனைக் கூடத்துடன்கூடிய வேளாண் ஆலோசனை மையங்கள், Agri Clinics, ரூபாய் 11.93 கோடி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன. ஒரு மையம் அமைக்க 50 சதவிகிதம் மானியமாக ரூபாய் 3 இலட்சம் அரசு வழங்குகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெ.சு. விஜயகுமார், சொல்லுங்கள்.

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்கு மாதிரி விவசாயப் பண்ணை கேட்டேன்; போளூர் பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்தக் கேட்டேன்; செண்பகத்தோப்பு அணைக்கட்டைத் திறக்கக் கேட்டேன்; அதிலேயிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் கேட்டேன்; களம்பூரிலே 30 படுக்கை வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் கேட்டேன்; களம்பூர், கேளூர் போன்ற பகுதிகளுக்குத் துணை மின் நிலையம் கேட்டேன்; அமிர்தி வன விலங்குப் பூங்காவை தரம் உயர்த்தக் கேட்டேன்; எதுவும் கிடைக்கவில்லை. இதாவது கிடைக்குமா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2010 ஏப்ரல் 27

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தந்தத் துறை அமைச்சரிடம் இந்தக் கேள்விகளைக் கேட்டு, பதிலைப் பெறலாம். என்னிடத்திலே பெற வாய்ப்பில்லை. திருவண்ணாமலை மாவட்டத்திலே இப்பொழுது நடமாடும் மண் ஆய்வுக் கூடம் ஒன்று இருக்கிறது; மாவட்டம் முழுவதும் ஆய்வு செய்கின்ற வாய்ப்பு இருக்கக்கூடிய காரணத்தினாலே, தனியாகப் போளூரில் ஒரு மண் ஆய்வுக் கூடம் அமைக்க வாய்ப்பில்லை.

முற்பகல் *9—50*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *102*, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன்மூர்த்தி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

102—

கலைக் கல்லூரி

***33591—திரு. மு. ஜெகன்மூர்த்தி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணத்தில் அரசுக் கலைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரக்கோணத்தில் அரசுக் கலைக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெகன்மூர்த்தி, அவையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலே மிகுந்த மக்கள் தொகைக் கொண்ட நகரம் அரக்கோணம். அரக்கோணம் எங்களுடைய பள்ளிப்பட்டு தொகுதிக்கும் மிக நெருங்கிய தொடர்புடையது